1978 மார்ச் 7]

பயணிகளை அதிகமாக ஏற்றிக் கொண்டு வரும்போது நடவடிக்கை எடுத்துத் தண்டனைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.10]

திரு. க. மருதாசலம்: தலைவர் அவர்களே, சென்னை போன்ற நகரங்களில் ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏறினால் கூட, நின்று கொண்டுதான் போக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வெளியூர்களில் செல்லுகின்ற பஸ்களில் அனுமதிக்கப்பட்டிருப்பது போல் இதிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னால் அமரக்கூடிய வகையில் ஒன்றிரண்டு சீட்டுகள் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற யோசனையை நடைமுறைப்படுத்துவதில் மிக்க சிரமம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள்.

*437 வினா—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் அம்மாவட்டத்தில் உள்ள கண்மாய்களில் விவசாயத் துறையின் மூலம் மின் இணைப்புடன் கூடிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அம்மாவட்டத்தில் கண்மாய்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டம் தற்பொழுது அரசிடம் எதுவும் இல்லை.

*438 வினா—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தாலுகாவில் உள்ள குளங்களில் விவசாயப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மின்சார மோட்டார்கள் மூலம் விவசாயிகள் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?